

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.7.2024) முகாம் அலுவலகத்தில், காவல்துறை துணைத் தலைவர் முனைவர் இரா. திருநாவுக்கரசு, எழுதிய "போட்டித் தேர்வு – பதினைந்தும் புதிது" என்ற புத்தகத்தை வெளியிட காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வின்போது, காவல்துறை தலைவர் டாக்டர் கே.ஏ. செந்தில் வேலன், மற்றும் முனைவர் இரா. திருநாவுக்கரசு, அவர்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (20.7.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா தலைமையில் ஊட்டி வர்கி தயாரிப்பாளர்கள் நலச் சங்கத்தின் நிர்வாகிகள் முகம்மது பரூக், பயிஸ், பைசல், திருமதி. மிஷ்ரா ஆகியோர் சந்தித்து, ஊட்டி வர்கிக்கு ஒன்றிய அரசின் புவிசார் குறியீடு (Geographical Indication Registry) வழங்கப்பட்டதற்கான சான்றிதழை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.

# கனிமத் திருட்டுகளைத் தடுக்க வேண்டும்!

## அதிகாரிகளுக்கு அமைச்சர் துரைமுருகன் உத்தரவு



சென்னை, ஜூலை 21-

கனிமங்கள் கள்ளத்தனமாக எடுத்துச் செல்லப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர் துரைமுருகன் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். சென்னை தலைமைச் செயலகத்தில் புவியியல் மற்றும் சுரங்கத் துறையின் செயல்பாடுகள் மற்றும் அதன் முன்னேற்றம் குறித்து நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் தலைமையில் நேற்று முன்தினம் ஆய்வுக் கூட்டம் நடந்தது. அப்போது, அமைச்சர் துரைமுருகன் கூறியதாவது:

கடந்த ஆண்டுகளை காட்டிலும் இந்த ஆண்டு கனிமவளத்துறையின் வருவாயை அதிகரிக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பட்டியலிடப்பட்டது. சுரங்கங்கள் மற்றும் குவாரிகள் வைத்துள்ள நிலுவை தொகையை வசூல் செய்ய தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். சுரங்கங்கள் மற்றும் குவாரிகளில் விதி மீறல்களை ஆய்வு செய்து அபராதம் விதிப்பது, அண்டை மாநிலங்களுக்கு விதிகளுக்கு புறம்பாக கனிம வளங்களை எடுத்து செல்லும் வாகனங்களை கைப்பற்றி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் பதிவு செய்யப்படாமல் இயங்கும் செங்கல் சூளை, எம். சாண்ட் மற்றும் கிரஷர் அலகுகளை பதிவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். பறக்கும் படைகள் மண்டலங்களில் திடீர் தணிக்கை மேற்கொண்டு கனிமங்கள் கள்ளத்தனமாக எடுத்துச் செல்லப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். கூட்டத்தில் துறை செயலாளர் பணீந்திர ரெட்டி, கனிம வளத்துறை ஆணையர் சரவணவேல்ராஜ் மற்றும் கனிம வளத்துறை இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் மற்றும் உதவி இயக்குநர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

### தமிழ்நாட்டு மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினரின் கைது நடவடிக்கை!

# அலட்சியப் போக்குடன் செயல்படும் ஒன்றிய அரசின் தூக்கம் கலையுமா?

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கேள்வி!

சென்னை, ஜூலை 21-

தமிழ்நாட்டு மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினரின் கைது நடவடிக்கை தொடர்கிறது. ஆனால் மீனவர்களின் உரிமையை பாதுகாக்க வேண்டிய ஒன்றிய அரசு அலட்சிய போக்குடன் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல் தூக்கத்தில் உள்ளது என 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.



தினகரன்

ஜூலை 20, 2024 சனிக்கிழமை

**தூக்கம் கலையுமா?**

தமிழ்நாட்டை சேர்ந்த மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் அடிக்கடி கைது நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த இரு வாரங்களுக்கு முன்பு, தமிழ்நாட்டை சேர்ந்த 13 மீனவர்கள் வங்கக்கடலில் மீன்பிடித்து கொண்டிருந்தபோது, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

தற்போதைய நிலவரப்படி, 173 மீன்பிடி படகுகளுடன் 80 தமிழக மீனவர்கள் இலங்கை அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் உள்ளனர். மீனவர்கள் இதுபோன்று சிறைபிடிக்கப்படுவதால், அவர்களது வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களது குடும்பத்தினர் பெரும் சோகத்திற்கு உள்ளாகி இருக்கின்றனர்.

மீன்பிடி படகு பறிமுதல் மட்டுமின்றி, மீனவர்களின் உயிருக்கும் உத்தரவாதம் இல்லாத நிலை தொடர்கிறது. ஏற்கனவே, கடந்த 2017ம் ஆண்டு ராமேஸ்வர மீனவர் பிரிட்ஜோ, இலங்கை கடற்படையால் சுட்டுக்கொல்லப்பட்டார். கடற்பரப்பில் மீன் பிடிக்கும் மீனவர்களை சுட்டுக்கொல்வது என்பது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இலங்கை கடற்படையினர், சர்வதேச நெறிமுறைக்கு எதிராக செயல்பட்டு வருவதையே இது காட்டுகிறது.

இதுகுறித்து 20.7.2024 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக கூறி இலங்கை கடற்படையினர் அடிக்கடி கைது நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். கடந்த இரு வாரங்களுக்கு முன்பு, தமிழ்நாட்டை சேர்ந்த 13 மீனவர்கள் வங்கக்கடலில் மீன்பிடித்து கொண்டிருந்தபோது, இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

தற்போதைய நில வரப்படி, 173 மீன்பிடி படகுகளுடன் 80 தமிழக மீனவர்கள் இலங்கை அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் உள்ளனர். மீனவர்கள் இதுபோன்று சிறைபிடிக்கப்படுவதால், அவர்களது வாழ்வாதாரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களது குடும்பத்தினர் பெரும் சோகத்திற்கு உள்ளாகி இருக்கின்றனர்.

மீன்பிடி படகு பறிமுதல் மட்டுமின்றி, மீனவர்களின் உயிருக்கும் உத்தரவாதம் இல்லாத நிலை தொடர்கிறது. ஏற்கனவே, கடந்த 2017ம் ஆண்டு ராமேஸ்வர மீனவர் பிரிட்ஜோ, இலங்கை கடற்படையால் சுட்டுக் கொல்லப்பட்டார். கடற்பரப்பில் மீன் பிடிக்கும் மீனவர்களை சுட்டுக்கொல்வது என்பது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது. இலங்கை கடற்படையினர், சர்வதேச நெறிமுறைக்கு எதிராக செயல்பட்டு வருவதையே இது காட்டுகிறது.

தமிழ்நாடு மீனவர்கள் காக்கப்பட வேண்டும் என இங்குள்ள அரசியல் தலைவர்கள் தொடர் அழுத்தம் கொடுத்து வந்தாலும், ஒன்றிய பா.ஜ. அரசு கண்டுகொள்ளவில்லை. தமிழ்நாட்டு மீனவர்கள், ஏதோ வெளிநாட்டினர் போன்று ஒன்றிய பா.ஜ. அரசு பாராமுகமாக செயல்படுகிறது. இலங்கை சிறையில் உள்ள தமிழ்நாட்டு மீனவர்களை விடுவிக்க, ஒன்றிய பா.ஜ. அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், கடந்த 11ம் தேதி ஒன்றிய அரசின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம் எழுதியுள்ளார். ஆனால், இதுவரை எவ்வித நடவடிக்கையும் இல்லை.

ஒன்றிய அரசின் இந்த அலட்சிய போக்கிற்கு பாடம் புகட்டும் வகையில், நேற்று முன்தினம் சென்னை ஐகோர்ட் மதுரை கிளை, சரியான குட்டு கொடுத்துள்ளது. அதாவது, "தமிழ்நாட்டு மீனவர்களும் இந்திய குடிமக்கள்தான். அவர்களை சமமாக கருதி, ஒன்றிய அரசு மீட்பு நடவடிக்கையில் இறங்க வேண்டும்" என எச்சரிக்கை கொடுத்துள்ளது. நீதிமன்றத்திடம் இருந்து குட்டு வாங்குவது, ஒன்றிய அரசுக்கு ஒன்றும் புதிது அல்ல. ஏற்கனவே, நீட் தேர்வு மோசடி வழக்கில் உச்சநீதிமன்றத்திடம் இருந்து குட்டு வாங்கியது.

தொடர்ந்து, டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் கைது விவகாரத்திலும் உச்சநீதிமன்றத்திடம் குட்டு வாங்கியது. தற்போது, மீனவர்கள் விவகாரத்தில் சென்னை ஐகோர்ட் மதுரை கிளையிடம் குட்டு வாங்கியுள்ளது. நீதிமன்றம் வாயிலாக எத்தனை முறை குட்டு வாங்கினாலும் ஒன்றிய பா.ஜ. அரசின் தூக்கம் கலையாமல் இருப்பது விநோதமாக உள்ளது. இலங்கையுடன் நாம் செய்து கொண்ட கச்சத்தீவு உடன்பாடு காரணமாக, கச்சத்தீவை ஒட்டியுள்ள பகுதிகளில் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன் பிடிக்கும் உரிமை பறிபோய்விட்டது. அவர்களது உரிமையை பாதுகாக்க ஒன்றிய பா.ஜ. அரசும் தவறிவிட்டது.

மீனவர்கள் பிரச்சினை, காவிரி நீர் பிரச்சினை, நெடுவால் பிரச்சினை, பாலாறு பிரச்சினை, பவானி ஆறு பிரச்சினை, மேகதாது அணை பிரச்சினை, முல்லை பெரியார் அணை பிரச்சினை என எதுவாக இருந்தாலும், தமிழ்நாட்டை ஒன்றிய அரசு வஞ்சித்து வருகிறது. தமிழ்நாட்டை சேர்ந்தவர்களாக இருந்தாலும், குஜராத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் இந்திய குடிமக்கள்தான். அவர்களது உரிமையை, நலனை பாதுகாப்பது ஒன்றிய அரசின் கடமை. அதை உணர்ந்து செயல்படுவதே நல்லது.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் விரைவில் திறந்து வைக்கிறார்!

# கிண்டியில் குழந்தைகளுக்கான இயற்கைப் பூங்கா அமைக்கும் பணி!

## வனத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன் ஆய்வு!

சென்னை, ஜூலை 21-

கிண்டியில் முதல்வர் அவர்களால் விரைவில் திறக்கப்படவுள்ள குழந்தைகளுக்கான இயற்கை பூங்கா அமைக்கும் பணிகளை வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா. மதிவேந்தன் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

கிண்டி சிறுவர் பூங்காவை மறுவடிவமைத்து குழந்தைகளுக்கான இயற்கை பூங்கா அமைக்க தமிழக அரசால் திட்டமிடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையில் கிண்டி சிறுவர் பூங்காவை மறுவடிவமைக்க தமிழக அரசு ரூ.20.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

முதல்வர் அவர்களால் விரைவில் திறக்கப்படவுள்ள குழந்தைகளுக்ககான இயற்கை பூங்கா அமைக்கும் பணிகள் நிறைவடையும் தருவாயில் உள்ளதை வனத்துறை அமைச்சர் நேரில் சென்று பார்வையிட்டு பணிகளை விரைந்து முடிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து சென்னை வனக்கோட்டம் பள்ளிக்கரணை சரக பொறுப்பில் உள்ள கொட்டிவாக்கம் கிராம புல எண்.479/2 மற்றும் 5ல் கண்ட சுமார் 2.50 ஏக்கர் நிலத்தில் வனத்துறை பணியாளர்களுக்கு அடுக்குமாடி குடியிருப்பு கட்டிக் கொடுப்பது தொடர்பாக தேர்வு செய்யப்பட்ட இடத்தினை வனத்துறை அமைச்சர் மரு.மா. மதிவேந்தன் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் முதன்மை செயலாளர் முனைவர். செந்தில்குமார், முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்) முனைவர். சுதான்ஷு குப்தா, முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் மற்றும் வன உயிரினக் காப்பாளர்) ஸ்ரீனிவாச ரெட்டி மற்றும் சென்னை மண்டல தலைமை வனப்பாதுகாவலர், திருமதி. கௌ. கீதாஞ்சலி உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

### 'நான் முதல்வன்' போட்டித் தேர்வுப் பிரிவு

# யு.பி.எஸ்.சி. முதன்மைத் தேர்வுக்கான ஊக்கத்தொகைத் திட்டம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜூலை 21-

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக்கழகம் நான் முதல்வன் போட்டித் தேர்வுப் பிரிவு சார்பில் தமிழ்நாடு அரசின் யு.பி.எஸ்.சி. முதன்மைத் தேர்வுக்கான ஊக்கத்தொகை திட்டம் (2024) குறித்த அறிவிப்பினை தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு:-

நான் முதல்வன் திட்டத்தின் கீழ் போட்டித் தேர்வுப் பிரிவானது இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் 07.03.2023 அன்று துவங்கி வைக்கப்பட்டது.

அப்பிரிவானது தமிழ்நாட்டு இளைஞர்கள் ஒன்றிய அரசு வேலைவாய்ப்புக்கான போட்டித் தேர்வுகளை எளிதாக அணுகும் வண்ணம் பல பயிற்சித் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இந்நிலையில் 2023-24-க்கான தமிழ்நாடு அரசின் பட்ஜெட் உரையில், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் (TNSDC), அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியுடன் இணைந்து, ஒன்றிய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் குடிமைப் பணிகள் தேர்வுகளுக்காக பயின்று வரும் ஆர்வமுள்ள மாணவர்களுக்கு சிறந்த பயிற்சி மற்றும் இதர தேவையான வசதிகளைச் செய்து உதவும் வகையில் ஒரு திட்டத்தை செயல்படுத்தும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் 1,000 சிவில் சர்வீசஸ் பயின்று வரும் மாணவர்கள், மதிப்பீட்டுத் தேர்வு மூலம் தேர்வு செய்யப்படுவார்கள். முதல் நிலைத் தேர்வுக்குத் தயாராவதற்கு ஒவ்வொரு மாணவருக்கும் 10 மாதங்களுக்கு மாதம் ரூ.7,500 வழங்கப்படும். முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெறுவோருக்கு 25,000 ரூபாய் ஊக்கத்தொகையாக வழங்கப்படும்.

இத்திட்டம் 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் கடந்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 2024-2025-ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் உரையில், பத்தி எண்.78 இல், இந்தத் திட்டத்தின் தொடர்ச்சி குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, 2024-ஆம் ஆண்டின் யு.பி.எஸ்.சி. முதல்நிலை தேர்வில் (16.06.2024) அன்று தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்களுக்கு முதன்மைத் தேர்வுக்குப்பயிற்சி மேற்கொள்ள ஏதுவாக தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் கீழ் இயங்கிவரும் நான் முதல்வன் போட்டித் தேர்வுகள் பிரிவின் வாயிலாக 25,000 ரூபாய் நேரடியாக மாணவர்களின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும்.

இந்த ஊக்கத்தொகையைப் பெறுவதற்கு நடப்பு ஆண்டில் (2024) யு.பி.எஸ்.சி. முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவர்கள், https://portal.naanmudhalvan.tn.gov.in/upsc_ registration என்ற இணையதளத்தில் கொடுக்கப்பட்டிருக்கும் அறிவிக்கையைப் படித்து பார்த்து, 19.07.2024 முதல் 28.07.2024 வரை விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.



சிவகங்கை மாவட்டம் இளையான்குடி பேரூராட்சிக்கு குப்பை அள்ளும் வாகனத்தை அனைத்து வார்டுகளுக்கும் திருமதி.தமிழரசிரவிக்குமார் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் முன்னாள் எம்.எல்.ஏ. சுப.மதியரசன், பேரூராட்சி மன்றத்தலைவர் பி.ஏ.நஜ்முதீன், துணைத்தலைவர் இபுராகீம், செயல் அலுவலர் கோபிநாத் மற்றும் பேரூராட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.

### முதுமலை யானைகள் காப்பகம்

# 3 நாட்களுக்கு மூடப்படுவதாக அறிவிப்பு!

நீலகிரி, ஜூலை 21-

கனமழை காரணமாக முதுமலை யானைகள் காப்பகம் 3 நாட்களுக்கு மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம் முதுமலை புலிகள் காப்பகத்தின் தெப்பக்காடு பகுதியில், தமிழ்நாடு வனத்துறையினர் 1927ஆம் ஆண்டு முதல் யானைகள் முகாம் நடத்தி வருகின்றனர். இது ஆசியாவின் பழமையான யானைகள் முகாம்களில் ஒன்று. இந்த முகாம்களில் யானைகள் பராமரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது. காப்பகத்தில் உள்ள யானைகளை காண பல்வேறு நாடுகளிலிருந்தும், ஊர்களிலிருந்தும் பொதுமக்கள் வந்து செல்வர்.

இந்த நிலையில் நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகிறது. இதனால் பல்வேறு பகுதிகளில் நிலச்சரிவு உள்ளிட்ட பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டு வருகின்றன. அந்த வகையில் கனமழை காரணமாக முதுமலை யானைகள் காப்பகம் 3 நாட்களுக்கு (ஜூலை 22) மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மின்சாரம் துண்டிப்பு, குடிநீர் தட்டுப்பாடு, மரங்கள் விழுவது ஆகியவற்றால் சுற்றுலாப் பயணிகளுக்கு வாகன சவாரி நிறுத்தப்படுவதுடன், யானை முகாமும் மூடப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**புழல் து. திருநாவுக்கரசு**

**ஜூலை 21 (2019)**



இளமைக் காலம் முதலே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு கழகப் பணியாற்றியவர்.

புழல் பேரூர்க் கழகத்தில் 13வது வார்டு செயலாளராகவும், பேரூர் மாணவர் அணி அமைப்பாளராகவும், பின்னர் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராகவும், அதன்பின் புழல் பேரூர்க் கழகச் செயலாளராக நான்கு முறையும், சென்னை வடக்கு மாவட்டம் 23வது வட்டச் செயலாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

கழகச் சொற்பொழிவாளராகப் பணியாற்றி தமிழகம் முழுவதும் கழகக் கொள்கைகளைப் பரப்பியவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**